1972 ஆகஸ்ட் 21]

மாட்டுச் சாண வரட்டிகள்

• திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி) சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரச் சாலைகளில் மாட்டுச் சாண வரட்டி களைக் காய வைப்பது பற்றி அரசு அறியுமா?

(இ) ஆமெனில், இத்தொல்லையைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) சென்னை நகரின் தெருக்களில் உள்ள கால்நடை சாண வரட்டிகளை அகற்றத் தேவையான நடவடிக்கைகளை சென்னை மாநகராட்சி எடுத்துவருகின்றது.

Family Planning Drive for Women

* 134 *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Public Health be pleased to state whether separate wings are to be started for women for Family Planning Drive in this State?

மகளிர் குடும்பநலத் திட்டத்தை விரைவு படுத்துதல்

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில் குடும்ப நலத் திட்டத்தை விரைவு படுத்த மகளிர்க்கென தனியான பிரிவுகள் தொடங்கப்படவிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

T.B. Sanatorium, Sengipatti

* 135 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Mahatma Gandhi Memorial Tuberculosis Sanatorium, Sengipatti, Thanjavur district is working on a deficit;

(*b*) if so, the net deficit for the year 1970–71; and

(*c*) the amount sanctioned by the Government to reimburse the same?

காசநோய் மருத்துவமனை, செங்கிப்பட்டி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவமனை பணப் பற்றாக் குறையுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், 1970–71-ல் ஏற்பட்ட நிகரப் பற்றாக்குறை எவ்வளவு?

(உ) அதை ஈடு செய்ய அரசு அனுமதித்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ரூ. 92,101.84.

(உ) செங்கிப்பட்டி, மகாத்மா காந்தி காசநோய் மருத்துவ மனைக்கு ஆண்டொன்றிற்கு ரூ. 58,000 மான்யத் தொகையாக வழங் கப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத் திற்கும் அருகிலுள்ள மாவட்டங்களுக்கும் உள்ள ஒரே மருத்துவ மனை இது. அரசினரிடமிருந்து ரூ. 90 ஆயிரம் குறைவாகக் கிடைக்கிற காரணத்தால் பல நோயாளிகள் அனுமதி கிடைக்காமல் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. எனவே, ஈட்டுத் தொகையை அதிகரிக்க அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அரசினுடைய நல்லெண்ணத்தை இந்தப் புள்ளி விவரங்களிலிருந்தே தெரிந்து கொள்ள முடியும். 1968–69 இல் மானியமாகக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 80 ஆயிரம். 1969–70-இல் மானியமாகக் கொடுக்கப் பட்ட தொகை ரூ. 44 ஆயிரம். 1970–71 இல் மானியமாகக் கொடுச்கப்பட்ட தொகை ரூ. 58 ஆயிரம். எனவே, உதவி மானியத் தொகை அதிகரிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Honorary Surgeons

*136 *Q*.—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to abolish the post of Honorary Surgeons; and

(*b*) if so, when it will be abolished?